DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No.198 /2025 |
| Session | ... | |
| | | Prosecution / PW-3 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

Name : திரு.சகாபுதின்

Father's Name (or)

Husband Name : த/பெ.அப்துல்ஜபார்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

(Accused present.)

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 14.05.2026

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது அனிஷ்நகரில் குடியிருந்து ஓட்டலில் வேலை செய்து வருகிறேன். சமபவம் பற்றி எனக்கு எதுவும்தெரியாது. போலிசார் சாட்சியம்சொல்ல அழைத்ததின்பேரில் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(சாட்சி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது அவ்வாறு சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1.கடந்த 07.05.2025 தேதி மதியம் 15.30 மணியளவில் சாட்சி 2 ஹபிபுல்லா இருசக்கரவாகனத்தில் வரும்போது ஆஜர்எதிரி அவரது ஓட்டி வந்த வண்டியால் முட்டுவதுபோல வந்து அவரை கொன்றுவிடுவேன் என்று மிரட்டிசென்றதாக போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 08.05.2025 தேதி காலை 10.15 மணியளிவ்ல சாட்சி 2 ஹபிபுல்லா அனிஷ் நகரில் உள்ள சிவா என்பவர்வீட்டின் அருகேநின்று கொண்டிருந்தபோது அ்ந்த வழியாக வந்த ஆஜர் எதிரி சாட்சி2 யை முறைத்து கொண்டு வந்ததாகவும் அதை பற்றி சாட்சி 2 கேட்டபோது அவரை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி அவருடன் கட்டி உருண்டு சண்டை போட்டதாகவும் அங்கிருந்த சிராசுதின், காதர்மைதீன், நானும் ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டார்கள் ஆஜர்எதிரி வீட்டிலிருநது கத்தி எடுத்துவந்து ஹபிபுல்லாவை தாக்க வந்ததாகவும் அதை தடுத்த போது அ.சா.1 க்கு வலதுகை மணிகட்டில் காயம் ஏற்பட்டதகாவும் எதிரி அங்கிருந்து செல்லும்போது அனைவரையும் கொன்று விடுவதாக மிரட்டிவிட்டு சென்றதாகவும் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் தொடர்பாக நடவடிக்கை எடுக்ககோரி தொண்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சையில் இருந்த போது அங்கு வந்தபோலிசாரிடம் அ.சா.1 புகார் வாக்குமூலம் கொடுத்ததாக போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல., சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்துவிட்டு சம்பவம் பற்றி போலிசார் விசாரணையில் நடவடிக்கை எடுக்க கோரி அ.சா.1 மூலமாக புகார் வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது ஆஜர் எதிரி உங்களுக்கு தெரிந்தவர் என்பதால் அவருடன் சமரசமாக செல்வதால் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.